செ.வெ.எண்: 76 நாள்:01.11.2021

**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.11.2021) வெளியிட்டார்.**

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியலை அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (01.11.2021) வெளியிட்டார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2022 ஜனவரி 1-ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் இன்று 01.11.2021 காலை 11.00 மணி அளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் மருத்துவர். அ. அருண் தம்புராஜ், இ.ஆ.ப அவர்களால் வெளியிடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் கலந்துகொண்டனர். மேலும், வரைவு வாக்காளர் பட்டியலானது வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர் அலுவலகங்கள், மற்றும் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் இன்று வெளியிடப்பட்டது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 163. நாகப்பட்டினம், 164. கீழ்வேளூர் மற்றும் 165. வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. 163.நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியில் 221 வாக்குச்சாவடிகளும், 164. கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில் 203 வாக்குச்சாவடிகளும் மற்றும் 165.வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதியில் 227 வாக்குச்சாவடிகளும் ஆக மொத்தம் 651 வாக்கு சாவடிகள் உள்ளன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 5,69,331 ஆகும். இதில் 2,77,515 ஆண் வாக்காளர்களும், 2,91,804 பெண் வாக்காளர்களும் மற்றும் 12 மூன்றாம் பாலின வாக்காளர்களும் உள்ளனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள முன்று சட்டமன்ற தொகுதிகளில் முறையே கீழ்க்கண்டவாறு வாக்காளர்கள் உள்ளனர்.

| வ. எண் | சட்டமன்ற தொகுதியின் பெயர் | ஆண் | பெண் | இதரர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | 163.நாகப்பட்டினம் | 95,870 | 1,02,147 | 9 | 1,98,026 |
| 2 | 164.கீழ்வேளூர் | 87,170 | 91,318 | 3 | 1,78,491 |
| 3 | 165.வேதாரண்யம் | 94,475 | 98,339 | 0 | 1,92,814 |
| | **மொத்தம்** | **2,77,515** | **2,91,804** | **12** | **5,69,331** |

மேலும், 01.01.2022-ஐ தகுதி நாளாக கொண்டு நடைபெறும் சிறப்பு சுருக்க திருத்தம் 2022-ன்படி 18 வயது நிரம்பியவர்கள் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்த்தல், நீக்கம், திருத்தம் மற்றும் முகவரி மாற்றம் செய்வதற்கு ஏதுவாக அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் வருகின்ற 13.11.2021, 14.11.2021, 27.11.2021 மற்றும் 28.11.2021 ஆகிய நாட்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் அல்லது www.nvsp.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் மூலமோ விண்ணப்பிக்கலாம். பொது மக்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**